**தேதி :** 19.02.2026 **SC.No. :** 383/2025 **PW :1** **சுடலை மணி**

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாளை வைத்து தான் சம்பவத்தின்போது எதிரி தமிழ்ச்செல்வன் என்னை வெட்டினார். அந்த அரிவாள் **அ.சா.பொ.1** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் கம்பை வைத்து தான் சம்பவத்தின்போது எதிரி தமிழ்ச்செல்வனின் நண்பன் எதிரி விஜய் என்னை தாக்கினார். அந்த கம்பு **அ.சா.பொ.2** ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.21 17:12:07 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 383/2025</u>**
**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மீனாட்சி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஹரிகிருஷ்ணன் | தொழில் | : | தனியார் வேலை |
| கிராமம் | : | நல்லூர் | வயது | : | 36 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 19.02.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் நல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 சுடலைமணி என்பவரை எனக்கு தெரியும். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மாலை 04.40 மணியளவில் எனது வீட்டிற்கு அ.சா.1 சுடலைமணிக்கு சொந்தமான ஆட்டோவில் நானும், எனது அம்மா பத்மா ஆகியோர்கள் வந்து இறங்கி எங்கள் வீட்டிற்குள் சென்று விட்டோம். நான் வீட்டில் இருக்கும்போது, அ.சா.1 சுடலைமணியின் மனைவி எதிரி நந்தினி எனது வீட்டின் முன்பு வந்து, சுடலைமணியை பார்த்து கூதி மவனே என்று அசிங்கமாக திட்டினார்.

அதன்பின்னர் எதிரி தமிழ்ச்செல்வனும், அவரது நண்பர் எதிரி விஜய் என்பவரும் இருசக்கரவாகனத்தில் வந்தார்கள். எதிரி நந்தினி கையில் வைத்திருந்த கத்திரிக்கோலால் அ.சா.1 ஐ பார்த்து அசிங்கமாக பேசி, அவரின் இடது கை மணிக்கட்டின் மேல் குத்தினார். அவர் வலி தாங்க

முடியாமல் வடக்கு பார்த்து ஓடினார். அப்போது எதிரி தமிழ்செல்வன் கையில் அரிவாளை வைத்து அ.சா.1ன் தலையில் வெட்டினார். அதன் பின்னர் அ.சா.1 தலையை சாய்க்கும்போது, அதே அரிவாளால் அவரின் இடது பக்க கன்னத்தில் வெட்டினார். நான் அதை பார்த்து பயந்து ஓடினேன்.

அப்போது எதிரி தமிழ்ச்செல்வன் அரிவாளால் எனது தலையில் வெட்டினார். அதன் பின்னர் வெட்டும்போது நான் எனது கைகளால் தடுத்தபோது, எனது இடது கை பெருவிரலை தவிர மற்ற 4 விரல்களிலும் வெட்டுப்பட்டு காயம் ஏற்பட்டது. அதன் பின்னர் வெட்டும்போது நான் எனது வலது கையால் தடுத்தேன். அந்த வெட்டு எனது நடுவிரலில் இருந்து உள்ளங்கை வரை பட்டு நரம்பு கட்டாகி விட்டது. அதன் பின்னர் எனது வலது பக்க தோள்பட்டையின் பின்பக்கத்தில் தமிழ்ச்செல்வன் அரிவாளால் வெட்டினார். தமிழ்ச்செல்வன் வெட்டும்போதெல்லாம் என்னை பார்த்து, கூதி மவளே நீ சாவு தேவடியா, என்று சொல்லிக்கொண்டே வெட்டினார். அதன் பின்னர் எதிரி நந்தினி கத்திரிக்கோலால் எனது வயிற்றிலும், முதுகிலும் குத்தினார். (சாட்சி வலது தோள்பட்டையிலும், கை விரல்களிலும் உள்ள காயத்தழும்புகளை காண்பித்தார்.)

நான் சத்தம் போடவும் அக்கம், பக்கம் உள்ளவர்கள் வந்தார்கள். அவர்கள் வந்தவுடன் எதிரிகள் அனைவரும் என்னை பார்த்து "இன்னைக்கு தப்பிச்சுகிட்டே, என்னைக்கிருந்தாலும் உன்னை கொல்லாமல் விட மாட்டேன்" என்று சொல்லிவிட்டு சென்று விட்டார்கள். அக்கம் பக்கம் உள்ளவர்கள் 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் சொல்லி இரண்டு ஆம்புலன்ஸ் வரவழைத்து என்னை ஒரு ஆம்புலன்ஸிலும்,

அ.சா.1 சுடலைமணியை ஒரு ஆம்புலன்ஸிலும் ஏற்றி ஆலங்குளம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். ஆலங்குளம் அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் நடந்த சம்பவத்திற்கு அ.சா.1 சுடலைமணியிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னையும் விசாரித்தார்கள். எங்கள் இருவரையும் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு நான் சுமார் 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். எனக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளதால் குழந்தைகளை பார்க்க ஆள் இல்லாமல் நான் ஊருக்கு வந்து ஆவுடையானூர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.பொ.1 அரிவாள் வைத்து தான் எதிரி தமிழ்ச்செல்வன் என்னை வெட்டினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.21 17:12:17 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 383/2025</u>**

**<u>வழக்கு சாட்சி PW–3</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்திக் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சேகர் | தொழில் | : | வியாபாரம் |
| கிராமம் | : | நல்லூர் | வயது | : | 30 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 19.02.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் நல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 சுடலைமணி என்பவரை எனக்கு தெரியாது. அ.சா.2 மீனாட்சி என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர். 26.03.2023 ம் தேதி, மதியம் 03.30 மணியளவில் நான் எனது வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்தேன். அப்போது பக்கத்து வீட்டிற்கு அருகிலிருந்து திடீரென அலறல் சத்தம் கேட்டது. நான் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தபோது, அ.சா.1 சுடலைமணி காயம்பட்டு எனது வீட்டின் முன்பு இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அ.சா.2 மீனாட்சியும் கையில் காயம் ஏற்பட்டு வீட்டில் இருந்தார். நான் தான் 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் தெரிவித்தேன். ஆலங்குளம் காவல்நிலையத்திற்கு 108 ஆம்புலன்ஸிலிருந்து தகவல் கொடுத்தார்கள். ஆலங்குளம் அரசு மருத்துவமனைக்கு காயம்பட்ட இருவரையும் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள், நானும் உடன் இருந்தேன். அ.சா.1

சுடலைமணி, அ.சா.2 மீனாட்சி மற்றும் எதிரிகளுக்கும் குடும்பபிரச்சனை காரணமாக இந்த சம்பவம் நடந்ததாக பின்னர் தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.21 17:12:30 +0530